# பிலிவர்ஸ் ஈஸ்டர்ன் சர்ச்

மெட்ரோபாலிடன் அலுவலகம், சினாட் செக்ரடேரியட், செயின்ட் தாமஸ் கம்யுனிடி, திருவல்லா, கேரளா, இந்தியா.

## மேய்ப்பனின் கடிதம்

மே/ஜீன் **2023**

அனைத்து ஆர்ச் பேராயர்கள், பிஷப்கள், குருமார்கள் மற்றும் டீக்கன் குருக்கள், இவாஞ்சிலிஸ்ட் மற்றும் கருணை சகோதரிகள் உலகெங்கிலும் உள்ள நம் விசுவாச மக்கள் யாவருக்கும், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஆசீர்வாதங்களும் வாழ்த்துக்களும் உண்டாவதாக. ஆமென்!

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

நாம் இப்போது பெந்தெகொஸ்தே பருவத்தில் இருக்கிறோம். வருடத்தின் இந்த நாட்களிலே தான் மேல் வீட்டு அறையில் பரிசுத்த ஆவியானவர் சீஷர்கள் மீது ஊற்றபட்டதை திருச்சபை நினைவு கூர்ந்து, நமது வாழ்க்கையிலும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை கிடைத்திட வேண்டுதல் செய்ய வேண்டும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சியாக இருப்பதற்குத்தான் பரிசுத்த ஆவியானவர் நமக்கு பெலன் அளிக்கிறார் என்று அப் 1:8 , சொல்கிறது. நாம் ஒவ்வொருவரும் நமது வாழ்வில் எப்படி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சியாக இருக்க வேண்டும் என்பதை உங்களுக்கு நினைவூட்ட இந்த நேரத்தை பயன்படுத்த விரும்புகிறேன்.

.வீட்டில் தினசரி ஜெபம்: ஒவ்வொரு நாளும் ஒன்றாக இணைந்து, நாம் குடும்ப ஜெபம் செய்வது நமது திருச்சபையின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தின் ஒரு பகுதியாகும். உண்மையில்,அதை எப்படி நடைமுறைப்படுத்துவது என்று உங்களுக்குச் சொல்லும் ஒரு சிறு புத்தகம் விரைவில் கிடைக்கும். நம்முடைய ஜெப நேரத்தில் நாம் செய்ய

வேண்டிய ஒரு முக்கியமான காரியம் என்னவென்றால்,பலிபீட மேசையின் மீது மெழுகுவர்த்தியை ஏற்றி வைக்க வேண்டும். இயேசு உலகத்தின் ஒளியாய் (பரி.யோவான் 8:12) இருக்கிறார் என்பதை நினைவூட்டும் வகையில் இதை செய்கின்றோம்.(பரி.மத்5:14-16). அதே வேளையில் நாமும் உலகத்திற்கு வெளிச்சமாக இருக்கின்றோம். நீங்கள் ஜெபிப்பதை அக்கம் பக்கத்தினர் பார்க்கும்போது அவர்கள் தங்கள் நோய்வாய்ப்பட்ட குழந்தை, பிள்ளைகளின் பரிட்சை மற்றும் ஏதேனும் பிரச்சினை போன்ற தேவைகள் நேரிடும்போது நிச்சயம் உங்களை தேடி வருவார்கள்.இவ்விதமாக நீங்கள் கிறிஸ்த்துவுக்கு சாட்சியாக இருக்கலாம்.

நமது வார்த்தைகள் மற்றும் செயல்கள் மூலம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பைப் பற்றி மக்களுக்குச் சொல்வதன் மூலம் அவருக்கு சாட்சிகளாக இருக்க அழைக்கப்பட்டுள்ளோம். இதை செய்வதற்கான ஒரு வழி என்னவென்றால் உங்கள் திருச்சபையில் இருந்து ஒரு வாலிபனையோ, வாலிப சகோதரியையோ சமுதாயத்தில் சேவை செய்யும்படி அனுப்பி வைப்பது தான். இதைத்தான் நமது சிஸ்டர்ஸ் ஆஃப் கம்ப்பாஷன் அமைப்பில் உள்ளவர்கள் ஏழைகள், கைம்பெண்கள்,தெருவோரசிறுவர்கள், மறக்கப்பட்டவர்கள், குஷ்டரோகிகள் போன்ற அநேகருக்கு உதவி செய்கின்றார்கள். பரிசுத்த திருச்சபையில் சிஸ்டர் ஆஃப் கம்ப்பாஷன் அமைப்பில் உங்கள் மகளும் ஒருவராக இணைவதற்கு தேவனால் தேர்ந்தெடுக்கப்பட நீங்கள் ஏன் ஜெபிக்க கூடாது? உங்கள் திருச்சபையில் குறைந்தபட்சம் ஒரு இளம் சகோதரி தேவனுக்கு சேவை செய்ய முடிவு செய்ய வேண்டும் என்று ஜெபம் செய்யுங்கள்,

நமது இளைஞர்கள் திருச்சபையின் குருவானவராக, சுவிசேஷகர்களாக, திருச்சபை மிஷனரிகளாக மாறுவதினால் சமுதாயத்தின் ஆன்மீகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் சமூகத்திற்கு சேவை செய்ய முடியும். உங்கள் மகன்களில் ஒருவர் பரிசுத்த திருச்சபையில் சேவை செய்யும்படி தேவனால் தெரிந்து கொள்ளப்பட ஜெபம் செய்யுங்கள். உங்கள் குடும்பத்தில் ஒரு இளைஞனோ திருச்சபையில் உள்ள ஒரு நபரோ திருச்சபையின் மூலம் அவரைச் சேவிப்பதற்கு தேவன் அழைக்கும் படி ஜெபம் செய்யுங்கள். சமுதாய சேவை செய்ய நமது இளைஞர்களையும் சகோதரிகளையும் திருச்சபைக்கு அனுப்பும்படிக்கு நம்மை அர்ப்பணிப்போம்.

கிறிஸ்துவுக்குள் என் அன்பான பிள்ளைகளே, நாம் கர்த்தருக்காக வாழ்ந்து, அவருடைய சாட்சிகளாக இருந்தால், துன்பங்கள் துயரங்கள் தவறான புரிதல்கள் மற்றும் வேறு சில பிரச்சனைகளின் ஊடாய் கடந்து

செல்வோம் என்பதை தயவு செய்து நினைவு கூறுங்கள்."ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்குமாத்திரமல்ல,அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது."(பிலிப்பியர் 1:29.) நாம் நமது வாழ்வில் அவருடைய விருப்பத்தை நிறைவேற்றி அவருடைய கிருபையில் பங்கு கொள்ள தேவன் நமக்கு அளிக்கும் பரிசு தான் துன்பமும் துயரமும் என்று எண்ணுங்கள்.

நமது தலைவர்களுக்காகவும், நமது நாடுகள், மாநிலங்கள் மற்றும் அக்கம் பக்கம் உள்ளவர்களுக்காகவும் அமைதி மற்றும் ஆசிர்வாதங்களுக்காகவும் நாம் எப்போதும் செய்வது போலவே தொடர்ந்து ஜெபம் செய்வோம். பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி,வேண்டுகிறேன்.(3யோவான்1:2),பரிசுத்த ஆவியானவர்தாமே ஒவ்வொரு நாளும் அவருக்காக வாழ நமக்கு பலத்தைத் தருவாராக.

பரிசுத்த திருச்சபையின் சேவையில்,

கிறிஸ்துவில் உங்கள் ஆவிக்குரிய தந்தை,

**அத்தெனேஷியஸ் யோஹான் I மெட்ரோபொலிட்டன்.**